பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.26.04.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு ஏப்ரல் மாதம் 27ம் நாள் ( 27.04.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்:1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் மார்ச் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் மார்ச் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் மார்ச் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் மார்ச் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | இந்நகராட்சியில் தார் சாலைகள், சிமிண்ட் சாலைகள், பேவர் கல்தளம் மற்றும் மண் சாலைகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், அதற்கான உரிய வரைபடங்கள் தயார் செய்ய அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.6 | பரமக்குடி நகராட்சியில் தார்சாலைகள் 17.867 கி.மீ, சிமிண்ட் தளம் 9.347 கி.மீ, பேவர் கல்தளம் 19.610 கி.மீ. மண் சாலை 1.318 கி.மீ. ஆக மொத்தம் 48.142 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பகுதியில் உள்ள ஒருசில சாலைகள் மிகவும் பழுதடைந்தும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளது. மேலும், பொதுமக்களிடமிருந்து சாலையை செப்பனிட்டு தருமாறு புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்கருதி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2018–19ம் ஆண்டின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட கருத்துரு தயார் செய்யப்படடுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகள் தேர்வு செய்து உரிய மதிப்பீட்டில் திட்ட கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | வார்டு எண் | நீளம் (கி.மீ) | | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | தார் சாலை | சிமிண்ட் கான்கிரீட் பேவர் தளம் சாலை | | |
| | **<u>தார்சாலைகள்</u>** | | | | | |
| 1 | கொல்லம்பட்டரை தெரு, சின்னக்ககட தெரு, அய்யாச்சாமி தெரு, விவேகானந்தா வாசக சாலை, காந்திஜி ரோடு, எம்.எஸ்.அக்ரஹாரம், ஜீவா நகர் குறுக்கு தெரு, பாரதி நகர் 2வது தெரு (கிழக்கு), பாரதி நகர் தேசிய நெடுஞ்சாலை இணைப்புச்சாலை மற்றும் எஸ்.எஸ்.கோவில் தெருவில் (துரைப்பாலம் சந்திப்பு முதல் இரட்டைப்பிள்ளையார் கோவில் சந்திப்பு வரை) ஆகிய தெருக்களில் பேயர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி | 13, 12, 18, 30, 19, 20, 26, 8, 9 | 2.886 | | 5.50 | 100.00 |
| | **<u>கான்கீரிட் பேவர் பிளாக் சாலை</u>** | | | | | |
| 2 | பொன்னையாபுரம், எம்.ஜி.ஆர். நகர், பாலன் நகர் குறுக்கு தெருக்கள் மற்றும் சுந்தர்ராஜபட்டிணம் ஆகிய பகுதிகளில் கான்கிரீட் பேவர் கல்தளம் மற்றும் வடிகால் அமைக்கும் பணி. | 27, 28 | | 2.145 | 3.60 – 5.00 | 200.00 |
| 3 | ஜீவா நகர், எஸ்.எஸ்.காலனி, காந்தி நகர், வி.பி.நகர், கிறிஸ்தவ காலனி, தர்மராஜபுரம், வைகை நகர் குறுக்கு தெரு, கள்ளழகர் தெரு, அண்ணா நகர் குறுக்கு தெரு, வசந்தபுரம் குறுக்கு தெரு, | 1, 2, 8, 33, 15, 30, 23, 25 | | 2.230 | 3.60 – 5.00 | 200.00 |

| | |
|---|---|
| | <table><tr><td></td><td>சேதுபதி நகர் முதல் குறுக்கு தெரு, பாவுத்தொழிலாளர் சங்கம் குறுக்கு தெரு, சி.எஸ்.எம்.போர்டிங் ரோடு குறுக்கு தெரு (அங்கு நகர்) மற்றும் காட்டுப்பரமக்குடி ஆதிதிராவிடர் காலனி ஆகிய தெருக்களில் பேவர் கல்தளம் அமைத்து வடிகால் அமைக்கும் பணி</td><td></td><td></td><td></td><td></td><td></td></tr><tr><td></td><td>**மொத்தம்**</td><td></td><td>**2.886**</td><td>**4.375**</td><td></td><td>**500.00**</td></tr></table><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி திட்டப்பணிக்கான நிதி ஒதுக்கீடு ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்து தருமாறு கருத்துரு (DPR) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| பொருள்.7 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம், திடக்கழிவுகளிலிருந்து பகிர்ந்தாளுதல் முறையில், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பணிக்கு வாரச்சந்தை, ஜீவாநகர் பகுதி மற்றும் உழவர் சந்தை பின்புறம் ஆகிய மூன்று இடங்களில் நுண்ம கூட்டு மையம் அமைக்கும் பணிக்கு தலா ரூ.50.00 லட்சம் வீதம் மொத்தம் ரூ.150.00 லட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம், மேலும் இத்திட்டப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையினை அரசு முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து தரக்கோரி, கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் 02.03.2018 முதல் 12.03.2018 வரை நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட நடவடிக்கை அறிக்கையில் பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் இருந்து பிரித்து எடுக்கும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதிகளிலே தரம் பிரித்து உரம் தயாரிக்கவும் இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள புதிய உரக்கிடங்கில் பழைய உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி அகற்றுவதற்கும் மேலும் இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிருத்து எடுத்து சேகரிக்க மின்கல இயங்கி வாகனம் வாங்குவதற்கு கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, நிர்வாக அனுமதி வேண்டியும், நிதி ஒதுக்கீடு கோரியும் கருத்துருவினை, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நுண்ம கூட்டு மையம் அமைத்தல் | |
| | 1) ஜீவா நகர் | **70.00** |
| | 2) உழவர்சந்தை பின்புறம் | **70.00** |
| | 3) வாரச்சந்தை வளாகம் | **70.00** |
| 2 | முதல்நிலை சேகரிப்பு பணிக்கான வாகனம் வாங்குதல் | |
| | பேட்டரி வாகனங்கள் / 20 எண்ணம் | **36.00** |
| | இலகுரக வணிக வாகனம் / 6 எண்ணம் | **31.20** |
| 3 | Bio Mining at Municipal Compost Yard | **600.00** |
| | **மொத்தம்** | **877.20** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

மதிப்பீடு ரூ. 877.20 இலட்சத்தினை அரசு முழுமானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்ககோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் திடக்கழிவுகள் / காய்கறி கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான பாம்புவிழுந்தான் கிராமத்தில் உரக்கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டு அதன்பின் அவற்றின் தரம் பிரிக்கப்பட்டு மட்கும் குப்பைகளை மட்க செய்து உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகர் பகுதிகளில் தினசரி சேகரிக்கும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே Onsite composting முறையில் நுண்ம கூட்டு மையம் அமைத்து உரம் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளுமாறும், மேலும், இப்பணியை 15.05.2018க்குள் முடிக்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட 13.04.2018 அன்றைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக இந்நகராட்சி பகுதியில் நுண்ம கூட்டு மையம் ஜீவா நகர் பூங்கா, புதுநகர் பூங்கா, உழவர்சந்தை பின்புறம், சுதந்திர தினபூங்கா, மஞ்சள்பட்டிணம் சுடுகாடு ஆகிய ஐந்து இடங்களில் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27, பாலன் நகர் கிழக்கு பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2016–17ம் ஆண்டின் கீழ் மனித கழிவுகளை ஒழிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளும் பொழுது பணி நடைபெறும் இடமானது கால்வாயை சுற்றி உள்ள பகுதி என்பதால் சுகாதார வளாகத்திற்கான அஸ்திவாரம் ஆழமாக அமைக்கப்பட வேண்டி இருந்ததாலும், வளாகத்திற்கு

<table>
<tr><td></td><td>முன்புறம் கான்கிரீட் தளம் அமைக்கப்பட வேண்டி இருந்ததாலும், ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை செய்து முடிக்க கூடுதலாக ரூ.35926/— ஆகியுள்ளது. எனவே, இப்பணிகளை ஏற்கனவே பணி செய்து வரும் ஒப்பந்ததாரர் திரு. எம். சங்கர் மூலம் மதிப்பீடு விலை விகிதத்திலேயே செய்து முடித்தத்தற்கும், திருத்திய மதிப்பீடு ரூ.35926/—க்கும் மேற்படி கூடுதல் செலவினத் தொகை ரூ.35926/—ஐ திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிதிதாக கட்டிமுடிக்கப்பட்ட கழிப்பறைக்கு நச்சுத்தொட்டி மற்றும் தண்ணீர் வசதிக்கான பைப்லைன் மற்றும் விளக்கு வசதி செய்யும் பணிக்கு ரூ.1.60 லட்சம் மதிப்பீட்டில் 11.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>2.07% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர்</td><td>0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ. குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் 2016—17 மற்றும் 2017—18ம் ஆண்டு விபரங்களை தினந்தந்தி நாளிதழ் சிறப்பு மலரில் வெளியிட்ட வகைக்கு ரூ.41580/—ஐ தினந்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலன் நகர் முதல் தெருவில் உள்ள வடிகால் மற்றும் பைப் கல்வெட் மிகவும் பழுதடைந்து உள்ளதால், கழிவு நீர் தேங்கி நின்று சுகாதாரக்கேடு ஏற்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட தெருவில் சிறுபாலம் மற்றும் வடிகால் புதுப்பித்து கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.16</td><td>இந்நகராட்சி கல்வி நிதியின் இந்நகராட்சி பள்ளிகளில் தானியங்கி மணி மற்றும் செராமிக் கரும்பலகைகள் அமைக்கும் பணிக்கு ரூ.9.70 லட்சம் மதிப்பீட்டில் பணிகளை செய்ய 27.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>M/s. Treasure Envision, Madurai.</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.J.M.D solution, Madurai</td><td>0.01% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Treasure Envision, Madurai. கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.17</td>
<td>
தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக மொத்த அரசு மானியம் ரூ.8000/–ல் மாநில அரசு மானியம் ரூ.2000/–ம், மத்திய அரசு மானியம் ரூ.2000/–ம் நகராட்சி பங்களிப்பு ரூ.2000/–ம் மொத்தமாக ரூ.8000/– மதிப்பீட்டில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 2015–2016 மற்றும் 2016–2017ம் ஆண்டிற்கான கழிப்பறை கட்டும் இலக்கு 2866ஐ நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டு மானியத்தொகையும் வழங்கப்பட்டுவிட்டது.<br>
தூய்மை இந்தியா திட்டம், பரப்புரையாளர்களின் கழிப்பறை இல்லாத வீடுகள் கணக்கெடுப்பின்படி இந்நகர் பகுதியில் 525 வீடுகளுக்கு கழிப்பறை வசதி இல்லாமல் கழிப்பறை கட்ட இட வசதி உள்ளதாகவும் 1124 வீடுகளுக்கு கழிப்பறை கட்ட இட வசதி இல்லையெனவும் கண்டறியப்பட்டுள்ளது.<br>
நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் கழிப்பறை கட்ட இடவசதி உள்ள வீடுகளிலிருந்து விண்ணப்பங்கள் பெற்று 31.07.2018க்குள் கழிப்பறை கட்டும் பணியினை முடித்திட உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்பு மானிய தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து தற்சமயம் வழங்கிடவும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத் தொகை வரப்பெற்றவுடன் நகராட்சி பொது நிதியில் சரிசெய்து கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்த இலக்கான 525ற்கும் ரூ.8000/– வீதம் ரூ.4200000/– (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சம்) செலவினத்தில் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு –<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) மேலும், மொத்த இலக்கான 525ற்கும் ரூ.8000/– வீதம் ரூ.4200000/– (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சம்) செலவினத்தில் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
</tr>
<tr>
<td>பொருள்.18</td>
<td>
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அறிவுரையின்பேரில் நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளின் Physio – Chemical பண்புகளை ஆய்வு செய்து அறிக்கை அனுப்பிட தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளின் மாதிரிகளை அரசு அங்கீகாரம் பெற்ற பரிசோதனை நிலையம் “கிரீன் லிங்க் அநாலைடிக்கல் ரிசர்ஜ் லேபோரேட்டரி, கோயம்புத்தூர்“ நிறுவனத்திடம் மாதிரி ஒன்றுக்கு ரூ.4000/– வீதம் மொத்தமாக மூன்று மாதிரிகளுக்கு ரூ.12000/–ம் இதர செலவினங்களுடன் ரூ.15000/– உத்தேச செலவினத்தில் பரிசோதனை செய்து ஆய்வு அறிக்கை பெற்றிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.
</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு –<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கியும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | அரசாணை எண்.518 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்குதுறை நாள்.05.12.1984ம் தேதிய உத்தரவில் நகராட்சி நிதியில் பவர்டில்லர் ஓட்டுநர்களை நியமனம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.எப்3/15088/2009, நாள்.12.09.2011ன்படி பரமக்குடி நகராட்சியில் பொறியியல் பிரிவில் இரண்டு இழுவை வண்டி ஓட்டுநர் பணியிடங்களை 01.10.2011 முதல் 30.09.2012 வரை ஓராண்டு காலத்திற்கு மட்டும் நீட்டித்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், 01.10.2012 முதல் 30.09.2013 வரை ஓராண்டு காலத்திற்கும், அதனை தொடர்ந்து 01.10.2013 முதல் 30.09.2014ம் ஆண்டு வரை ஓராண்டு காலத்திற்கும், 01.10.2014 முதல் 30.09.2015 வரை ஓராண்டு காலத்திற்கும் மற்றும் 01.10.2016 முதல் 30.09.2017 வரை ஓராண்டு காலத்திற்கும் மேற்படி பணியிடத்தை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 01.10.2017 முதல் 30.09.2018 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட பணியிடத்தை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு –<br>நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.சி1/1618/2007 |
| பொருள்.20 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1631/2016/எச்1 நாள்.19.03.2018ம் தேதிய கடிதத்தில் 6 மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள தட்டச்சர் மற்றும் காவலர் பணியிடங்களை பூர்த்தி செய்ய பிரேரணை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் பொதுப்பிரிவில் தட்டச்சர் பணியிடம் ஒன்று கடந்த 10.04.2013ம் தேதி முதல் பதவி உயர்வு காரணமாக காலிப்பணியிடமாகவும், பொறியியல் பிரிவில் ஓய்வு, இறப்பு மற்றும் பணியிடமாற்றத்தின் காரணமாக 3 டேங்க் காவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. மேற்கண்ட பணியிடங்கள் 6 மாதங்களுக்கு மேல் காலியாக உள்ளது. இப்பணியிடங்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், நீண்ட காலமாக காலிப்பணியிடங்களாக உள்ளதாலும், இப்பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br><br>பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் தட்டச்சர் பணியிடம் ஒன்று மற்றும் பொறியியல் பிரிவில் டேங்க் காவலர் பணியிடங்கள் மூன்றும் 6 மாதங்களுக்கு மேலும், நீண்டகாலமாக காலியாக உள்ளதாலும் அத்தியாவசியமாக இப்பணியிடங்கள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட 4 பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதி வழங்குமாறு தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.3646/2015/சி1) |

| | |
|---|---|
| பொருள்.21 | இந்நகராட்சிக்கு பயன்பாட்டிற்கு 2018–19ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், டோனர் பதிவேடுகள் மற்றும் படிவங்கள், சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சகம் கோவில்பட்டி, இராமநாதபுரம் ராம்கோ கூட்டுறவு அச்சகம் பரமக்குடி லெட்சுமி பேப்பர் ஸ்டோர் அச்சகங்களில் வாங்கிக்கொள்ள தேவையான உத்தேச தொகை ரூ.700000/–க்கு மன்றம் அனுமதி வேண்டுப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | இந்நகராட்சியில் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் திடக்கழிவுகளை நகராட்சி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு அவற்றின் தரம் பிரிக்கப்பட்டு மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பணியாளர்களும், வாகனங்களும் அதிகமாக தேவைப்படுகிறது. எனவே, தூய்மை இந்தியா திட்டம் தலைப்பின் கீழ் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் குப்பைகளை வீடு வீடாக சேகரிப்பு செய்கையிலேயே குப்பைகளின் தரத்தைப் பிரித்து மக்கும் குப்பைகளை மட்டும் அந்தந்த பகுதியிலேயே முக்கிய சந்திப்புகளின் Onsite composting முறையில் மக்கும் குப்பைகளை சேகரித்து அங்கேயே உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கியதன் பேரில் இந்நகராட்சி பகுதியில் 20 இடங்களில் Onsite composting அமைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1. ஸ்டெர்லிங் எலக்ட்ரிக்கல் அன்ட் பிளம்பிங், பரமக்குடி –ரூ.6980/– (ஒரு எண்ணத்திற்கு)<br>2. ஏ. செய்யது வெல்டிங் ஒர்க்ஸ், பரமக்குடி. – ரூ.7650/–<br>3. கே. எம். நெயினா முகம்மது, பரமக்குடி – ரூ.8000/–<br><br>மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்டெர்லிங் எலக்ட்ரிக்கல் அன்ட் பிளம்பிங் , பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி